**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.2**
**OS.NO.104/2020**

| | |
|---|---|
| **NAME** | : பழனி |
| **FATHER NAME** | : |
| **VILLAGE** | : |
| **TALUK** | : |
| **CALLING** | : |
| **RELIGION** | : |
| **AGE** | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 06.07.2023.**

குறுக்கு விசாரணை

நான் வெல்டிங் வேலை பார்க்கிறேன். வழக்கின் விவரம் தெரியும். வழக்கு போடுவதற்காக பொன்னுரங்கம்தான் வழக்கறிஞரிடம் சொன்னார் என்றால் சரிதான். லலிதா, பழனி, லஷ்மி, பொன்னுரங்கம் ஆகியோர் சந்திரனின் வாரிசுகள் என்றால் சரி. வழக்கறிஞரை நான் மட்டும்தான் போய் பார்த்தேன். சந்திரனின் அப்பா பெயர் ராமசாமி கவுண்டர். ராமசாமி வாங்கிய சொத்துதான் இந்த வழக்கு சொத்தா என்றால் ஆமாம். ராமசாமியின் மனைவி பெயர் ஜெகதாம்பாள். ஜெகதாம்பாளுக்கு ராமசாமி சொத்தை கிரயம் செய்த விவரம் தெரியாது. 25.02.1953ல் ஜெகதாம்பாளுக்கு ராமசாமி செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிய விவரம் எனக்கு தெரியாது. ராமசாமி கவுண்டர், கண்ணப்ப கவுண்டர் இருவரும் அண்ணன், தம்பி என்றால் ஆமாம். பாகப்பிரிவினை அவர்கள் இருவருக்கும் இடையே நடந்தது என்றால் ஆமாம். அதன் தேதி விவரம் ஞாபகம் இல்லை. ராமசாமி கவுண்டருக்கு ஏ-ஷெட்யூலும், கண்ணப்பனுக்கு பி-ஷெட்யூலும் ஒதுக்கினார்கள் என்றால் ஆமாம். ராமசாமி அவருக்கு வந்த பாகத்தை செட்டில்மெண்ட் எழுதிவிட்டார் என்றால் இல்லை. ஏ-ஷெட்யூலில் உள்ள சொத்து எல்லாம் ஜெகதாம்பாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். (வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.